செ.வெ. எண்: 398 நாள்: 11.07.2012

# செய்தி வெளியீடு

கட்டுக்கோப்பான சமுதாய முன்னேற்றத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றும் துறையாக, அரசின் நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் முக்கியக் கருவியாக, நிர்வாகத்தின் முதுகெலும்பாக செயல்படும் வருவாய் துறை மக்கள் பணியினை திறம்பட செய்வதற்கான பல்வேறு நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் எடுத்து வருகிறார்கள்.

அந்த வகையில், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 81 வருவாய் கிராமங்களில், சில கிராமங்களில், நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகள் இருப்பதைக் கருத்தில் கொண்டும்; இந்த மாவட்டத்தின் மொத்த பரப்பளவு 1684 சதுர கிலோ மீட்டர் ஆக இருப்பினும் மக்களின் அடர்த்தி 1106 ஆக உள்ளதைக் கருத்தில் கொண்டும்; இந்த மாவட்டத்தில் உள்ள வருவாய் கிராமங்களின் பரப்பளவு, இதர மாவட்டங்களில் உள்ள வருவாய் கிராமங்களின் பரப்பளவினை ஒப்பிடும் பொழுது அதிகமாக இருப்பதையும், இந்த மாவட்டத்தில் உள்ள பல வருவாய் கிராமங்களின் மக்கள் தொகை 30000 லிருந்து 1 லட்சத்திற்கு மேல் இருப்பதை கருத்தில் கொண்டும், இங்குள்ள மக்கள் தங்களது கோரிக்கைகளுக்காக கிராம நிர்வாக அலுவலரை சந்திக்க பல கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்வதை தவிர்க்கும் வகையிலும், வருவாய் கிராமத்தின் பரப்பளவு அதிகமாக உள்ளதால் கிராம நிர்வாக அலுவலர்களால் தங்களின் நிர்வாகத்திற்கு உட்பட்ட பகுதிகளை முழுமையாக கண்காணிக்க இயலாத நிலையை தவிர்க்கும் பொருட்டும், வருவாய் கிராமங்களை பிரிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதன்படி, இம்மாவட்டத்தில் தற்போது உள்ள நாகர்கோவில் வருவாய் கோட்டத்திற்குட்பட்ட அகஸ்தீஸ்வரம் மற்றும் தோவாளை வட்டங்கள், பத்மநாபபுரம் வருவாய் கோட்டத்திற்குட்பட்ட கல்குளம் மற்றும் விளவங்கோடு வட்டங்கள் ஆகியவற்றில் உள்ள 81 வருவாய் கிராமங்கள் சீரமைக்கப்படும். இந்த சீரமைப்பின் படி புதியதாக 107 வருவாய் கிராமங்கள் உருவாக்கப்பட்டு மொத்தம் 188 வருவாய் கிராமங்கள் ஏற்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

புதியதாக உருவாக்கப்பட்டுள்ள 107 வருவாய் கிராமங்களில் பணிபுரிய 107 கிராம நிர்வாக அலுவலர் மற்றும் 107 கிராம உதவியாளர் பணியிடங்களை தோற்றுவிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதனால் அரசுக்கு தொடரும் செலவினமாக ஆண்டொன்றுக்கு 2 கோடியே 68 லட்சத்து 12 ஆயிரத்து 488 ரூபாயும், தொடரா செலவினமாக 5 கோடியே 60 லட்சத்து 68 ஆயிரம் ரூபாயும் ஏற்படும்.

******

வெளியீடு:இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள் : 11-7-2012